Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 344/2022 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW5 / PW8 |
| Name | : | சந்தோஷ்குமார் |
| Father Name/Husband Name | : | த/பெ. விஸ்வநாதன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 03.11.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.
( எதிரி ஆஜர். ).

<u>**முதல் விசாரணை:**</u>

நான் சங்கரன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு மரம் இழைப்பதற்காக நான் பட்டாம்பாக்கத்தில் உள்ள மரவாடிக்கு அருகே இருக்கும் மர இழைப்பகத்திற்கு சென்றிருந்தேன். அந்த இழைப்பகத்தின் பெயர் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் பேசி கொண்டார்கள். நான் அதன் பிறகு வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான்எனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>

கடந்த 03.12.2021ம் தேதி நான் கயல் மரம் இழைப்பகத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது பகல் சுமார் 2.15 மணியளவில் நானும் மேற்படி மர இழைப்பகத்தின் உரிமையாளர் கமல் மற்றும் பக்கத்தில் உள்ள சலூன் கடைக்காரர் தனசேகர் ஆகியோர் நின்றுபேசிக்கொண்டு இருந்தோம் என்றும் அப்போது கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த ராஜவேல் என்கிற சந்திரசேகரன் அவருடைய PY-01-CP-7057 என்ற பதிவெண்கொண்ட இரு சக்கர வாகனத்தில் அவருக்கு பின்னால் தட்சிணாமூர்த்தி என்பவரை உட்கார வைத்துக்கொண்டு வந்து பாலாஜி டிப்பர் மரவாடிக்கு எதிரே தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றுரோட்டை கடப்பதற்காக டிவைடர்அருகே இண்டிகேட்டர் போட்டு நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அவருடைய PY-01-AU-1220 என்ற பதிவெண்கொண்ட அப்பாச்சி இரு சக்கரவாகனத்தை

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து ராஜவேல் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் அப்போது அதன் பின்னால் அமர்ந்து வந்த தட்சிணாமூர்த்தி என்பவருக்கு பலத்த அடிப்பட்டது என்றும் இந்த சம்பவத்தை நேரில் பார்த்து நாங்கள் ஓடி சென்று அடிப்பட்டவர்களை துாக்கி ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றும் போலிசார்விசாரணையில் நடந்த விபரங்களை கூறிவிட்டு தற்போது எதிரி என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை வழக்கில் இருந்த காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு சாட்சியத்திலிருந்த விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.